### வாசிப்பை ஊக்குவிக்கும் தவறவிடக் கூடாத நிகழ்வாக

# ‘தி.மு.க. 75 - அறிவுத் திருவிழா’வை நடத்திக்காட்டிய உதயநிதி ஸ்டாலின் - இளைஞர் அணித் தம்பிமார்களுக்கு பாராட்டுகள்!

## முற்போக்கு புத்தகக் காட்சியைப் பார்வையிட்டு – வலைதளத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்து!





**சென்னை, நவ.17-**

**“தி.மு.க. 75 அறிவுத் திருவிழா”-வில் அமைக்கப்பட்டுள்ள முற்போக்கு புத்தகக் காட்சியைப் பார்வையிட்டது குறித்து, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில் குறிப்பிட்டுள்ளதாவது:-**

தி.மு.க. 75 அறிவுத் திருவிழா முற்போக்குப் புத்தகக் காட்சி: கொள்கைக் கருவூலம்!

வள்ளுவர் கோட்டத்தில் இரண்டு மணி நேரத்துக்கு மேல் இருந்து திராவிடம், அம்பேத்கரியம், கம்யூனிசம், பெண்ணியம் என அணிவரிசையில் அமைந்த ஐம்பதுக்கும் மேற்பட்ட அரங்குகளைப் பார்வையிட்டு, அங்கு வந்திருந்த வாசகர்கள், ஆர்வலர்கள், பதிப்பகத்தாருடன் உரையாடியது மனநிறைவளிக்கும் அனுபவமாக அமைந்தது.

குறிப்பாக, ‘Carry on, but remember’ எனும் பேரறிஞர் அண்ணா அவர்கள் நாடாளுமன்றத்தில் ஆற்றிய உரைகளின் தொகுப்பைக் கண்டதும் நம் அண்ணன் அன்று விடுத்த எச்சரிக்கை இன்றைய ஒன்றிய ஆட்சியாளர்களுக்கும் பொருத்தமாக இருக்கிறதே என வியந்தேன். என் பங்கிற்கு, அறுபதுக்கும் மேற்பட்ட நூல்களை வாங்கிவிட்டேன்.

வாசிப்பை ஊக்குவிக்கும் தவறவிடக் கூடாத நிகழ்வாக இதனை நடத்திக் காட்டியுள்ள திரு. உதயநிதி ஸ்டாலின் மற்றும் அவரது தி.மு.க. இளைஞர் அணி தம்பிமார்களுக்கு மீண்டுமொருமுறை எனது பாராட்டுகள்! வரும் ஆண்டுகளிலும் தொடரட்டும் அறிவுத்திருவிழா!

இவ்வாறு அப்பதிவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (16.11.2025) ஜவஹர்லால் நேரு உள்விளையாட்டு அரங்கில் நடைபெற்ற ”சென்னை ஈ–ஸ்போர்ட்ஸ் குளோபல் சாம்பியன்ஷிப் 2025 (Chennai Esports Global Championship 2025) போட்டியின் இரண்டாம் கட்டமாக நடைபெற்ற பி.ஜி.எம்.ஐ. போட்டியில் வெற்றி பெற்ற அணிகளுக்கு கோப்பை மற்றும் பரிசுகளை வழங்கினார். இந்நிகழ்வில் அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.

### S.I.R. கணக்கீட்டுப் படிவங்களை நிரப்பிடுவதற்கு வாக்காளர்களுக்கு உதவிட

# பூத் வாரியாக உதவி மையங்களை கழகத்தின் சார்பில் அமைத்திடுவீர்!

## காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட –மாநகர – ஒன்றிய – நகர – பகுதி – பேரூர்ச் செயலாளர்களுக்கு மாவட்டச் செயலாளர் – அமைச்சர் தா.மோ.அன்பரசன் வேண்டுகோள் !

*காஞ்சிபுரம்,நவ.17-*

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்தில் பூத் வாரியாக வழங்கப்பட்டுள்ள S.I.R. கணக்கீட்டுப் படிவங்களை நிரப்பிடுவதற்கு வாக்காளர்களுக்கு உதவிட, கழகத்தின் சார்பில் S.I.R. உதவி மையங்களை (HELP DESK) அமைத்திட வேண்டும் என்று, மாநகர - ஒன்றிய - நகர - பகுதி - பேரூர் செயலாளர்களுக்கு மாவட்டச் செயலாளர் அமைச்சர் தா.மோ.அன்பரசன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கை :-

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்தில் உள்ள 6 சட்டமன்றத் தொகுதிகளிலும், அடங்கியுள்ள, பெரும்பாலான வாக்குச்சாவடிகளில் 80 சதவிகிதத்திற்கும் அதிகமாக வழங்கப்பட்டுவிட்டது,

அப்படி வழங்கப்பட்டுள்ள கணக்கீட்டுப் படிவங்களை பல பூத்களில் வாக்காளர்களுக்கு பூர்த்தி செய்வதற்கு BLO -க்கள் உதவிட முன்வரவில்லை. S.I.R. கணக்கீட்டுப் படிவங்களை நிரப்புவதற்கு வாக்காளர்களும் மிகவும் சிரமப்படுகின்றனர். அவர்களிடம் முந்தைய 2002 அல்லது 2005 வாக்காளர் பட்டியலில் அவர்களது பெயர் எங்கிருக்கிறது என்பதை கண்டறிய முடியாமல் திணறுகின்றனர்.

இதையெல்லாம் கருதில் கொண்டு, பூத் வாரியாக வாக்காளர்களுக்கு தரப்பட்டுள்ள கணக்கீட்டுப் படிவங்களை நிரப்புவதற்கு, கழகத்தினர் அந்தந்த பூத்களில் உதவி மையங்களை அமைத்து உடவிட வேண்டும் என்று தலைமைக் கழகம் அறிவுறுத்தியுள்ளது.



தலைமைக் கழகம் அறிவுறுத்தியுள்ளபடி, அந்தந்த ஒன்றிய - நகர - பகுதி - பேரூர் செயலாளர்கள், அந்தந்த வாக்குச்சாவடிகளில் அல்லது வார்டு அல்லது ஊராட்சி அளவில் கழகத்தின் சார்பில் வாக்காளர்கள் கணக்கீட்டுப் படிவங்களை நிரப்பிட, நிழல்கூரை அமைத்து மேஜை நாற்காலிகள் போட்டு, S.I.R. - உதவி மையங்களை அமைத்து உடவிட வேண்டும் என்று அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

மேலும், பள்ளிக்கூடங்கள், பேருந்து நிறுத்தம், ஊர் சாவடி உள்ளிட்ட இடங்களிலும் கழகத்தின் பூத் உதவி மையக்குழுவினர் நிழற்குடை அமைத்து வாக்காளர்களுக்கு கணக்கீட்டுப் படிவங்களை நிரப்பிடு வதற்கு உதவிடலாம்.

அத்துடன் அந்தந்த வார்டு கிளைச் செயலாளர்கள் ஒவ்வொரு பூத்திலும் உள்ள வாக்காளர்களுக்கு கணக்கீட்டுப் படிவங்கள் சரியாக சென்று சேர்ந்து உள்ளதா என்று ஆராய்ந்திட வேண்டும் என்றும் ஒரணியில் தமிழ்நாடு இயக்கத்தின் மூலம் இணைந்த குடும்ப உறுப்பினர்களின் முழு விவரங்கள் பற்றி மாவட்டக் கழகம் தந்துள்ள பட்டியலை சரிபார்த்து, கழக உறுப்பினராக சேர்ந்த எந்த ஒரு வாக்காளரும் விடுபடாமல் இருப்பதை உறுதி செய்திட வேண்டும் என்றும் அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

வாக்குச்சாவடி உதவி மையங்கள் அமைத்து BLA 2-க்கு உதவிட BLC. BDA மற்றும் அந்த பூத்தில் அடங்கியுள்ள இளைஞர் அணி - மாணவர் அணி - மகளிர் அணி IT WING ஆகியோர் அனைவரையும் அந்தந்த வார்டு கிளைக்கழகச் செயலாளர்கள் முழுமையாக பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்றும் மேலும் கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் அறிக்கையில் கூறியுள்ளார்.

# தி.மு.க.விற்குக் கிடைத்திருக்கின்ற அரிய கருவூலம்தான் நம்முடைய உதயநிதி ஸ்டாலின்!

## சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் ‘மனிதநேய உதய நாள்’ – 25 இணையர்களுக்கு – அமைச்சர் பி.கே. சேகர்பாபு முன்னின்று நடத்திய மணவிழாவில் அமைச்சர் எ.வ.வேலு முழக்கம்!

**சென்னை, நவ.17**

**“நம்முடைய இயக்கத்திற்குக் கிடைத்திருக்கின்ற கருவூலம்தான் நம்முடைய உதயநிதி ஸ்டாலின் அவர்கள் என்று அமைச்சர் எ.வ.வேலு அவர்கள் கூறினார்.**

**சென்னை கிழக்கு மாவட்டம் சார்பில், தி.மு.க. மாநில இளைஞரணி செயலாளரும், துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்களின் 47 ஆம் ஆண்டு பிறந்த நாளையொட்டி 25 இணையர்களுக்கு மண விழா - ‘மனிதநேய உதய நாள்’ விழா என்ற தலைப்பில் நேற்று (16.11.2025) காலை சென்னை பெரியார் திடலில் உள்ள நடிகவேள் எம்.ஆர்.இராதா அரங்கத்தில் நடைபெற்றது.**

**அவ்விழாவில் அமைச்சர் எ.வ.வேலு அவர்கள் உரையாற்றினார்.**

**அவரது உரை வருமாறு:**

சென்னை கிழக்கு மாவட்ட திராவிட முன்னேற்றக் கழக இளைஞரணியின் சார்பாக, 25 இணையர்களுக்குத் திருமண விழா என்ற பெயரில், மனிதநேய உதய நாள் என்ற உதயம் என்ற அற்புதமான ஒரு நிகழ்விற்குத் தலைமைப் பொறுப்பேற்று இருக்கின்ற சென்னை கிழக்கு மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் வழக்குரைஞர் வானவில் விஜய் அவர்களே,

விழாவிற்கு இலக்கணமாக தமிழ்நாட்டிலேயே திகழ்ந்து கொண்டிருக்கின்ற, ஒரு விழா இப்படித்தான் எடுக்கவேண்டும் என்று மாவட்டச் செயலாளர்களுக்கெல்லாம் ஓர் அடையாளமாக இதை உணர்த்திக் கொண்டிருக்கின்ற அறநிலையத் துறை அமைச்சர், வந்திருக்கின்ற கழகத் தோழர்களின் உள்ளங்களில் எல்லாம் குடிகொண்டிருக்கின்ற மாவட்டக் கழகத்தின் செயலாளர் என்னருந் சகோதரர் சேகர்பாபு அவர்களே,

நிகழ்ச்சிக்குப் பொறுப்பேற்று இருக்கின்ற பகுதிக் கழக செயலாளர் சுதாகர் அவர்களே, வேலு அவர்களே,

மாவட்ட அவை செயலாளர் அருமை அண்ணன் ஏகப்பன், சிறீராமுலு, கே.ஏ.எஸ். எம்.நாதன், பரிதிஇளம் சுருதி, ராஜேசுவரி சிறீதர், நிர்மலாதேவி, சுந்தரராசன், பாத்திமா, முசாபர் போன்ற பொறுப்பாளர்களே,

வரவேற்பு கொடுத்த மாவட்ட இளைஞரணியின் துணை அமைப்பாளர்கள் வினோத், பாலமுருகன், ஜெகதீஷ், தனசேகர், சங்கர், பாலாஜி, ஜெயக்குமார் போன்ற இளைஞரணி தம்பிமார்களே,

நிகழ்ச்சியில் கலந்துகொண்டு சிறப்பைச் சேர்த்துக் கொண்டிருக்கக் கூடிய தலைமைச் செயற்குழு உறுப்பினர் வணக்கத்திற்குரிய மேயர் சகோதரி பிரியா ராஜன் அவர்களே,

சட்டப்பேரவை உறுப்பினர்கள் தாயகம் கவி அவர்களே, ஜோசப் சாமிவேல் அவர்களே, வெற்றியழகன் அவர்களே, எழும்பூர் தொகுதி தேர்தல் பார்வையாளர் சகோதரி யாழினி அவர்களே, நிகழ்ச்சியில் பங்கு பெற்றிருக்கின்ற மாநில நிர்வாகிகள், பகுதிக் கழக செயலாளர், பகுதி கழக நிர்வாகிகள், நிறைவாக நன்றி சொல்லக்கூடிய விஜயகுமார் பாபு என்கின்ற சந்திரன் அவர்களே, நிகழ்ச்சியைத் தொகுத்து வழங்கிக் கொண்டிருக்கின்ற கவிஞர் தனிக்கொடி அவர்களே, 25 இணையர்களுடைய திருமண விழாவில் கலந்துகொண்டிருக்கக்கூடிய மணமக்களின் உறவின பெருமக்களே,

கழகத்தினுடைய பல்வேறு அணிகளைச் சேர்ந்த அணி அமைப்பாளர்களே, துணை அமைப்பாளர்களே உங்கள் அனைவருக்கும் முதலில் என்னுடைய அன்பு கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன்.

ஒரு விழா எப்படி எடுக்கவேண்டும் என்றால், இப்படித்தான் எடுக்கவேண்டும் என்பதைத்தான் இங்கே வாழ்த்துரையாற்றிய பிரியா ராஜன் சொன்னார்.

கிழக்கு மாவட்டத்தின் சார்பில் நடைபெறுகின்றது என்பதற்காக அவர் அதை சொல்லவில்லை. ஏனென்றால், அப்படிச் சொன்னார், அது சேகர்பாபு அவர்களுக்காக சொன்னது போன்று தெரியும்.

நான் ஒன்றும் சென்னைவாசி அல்ல. எனக்கு சென்னையில் ஓட்டும் கிடையாது. எனக்கு ஓட்டுப் போடுகின்றவர்கள் திருவண்ணாமலையில்தான் இருக்கிறார்கள்.

யாரையும் மிகைப்படுத்திப் பேசவேண்டும் என்கின்ற அவசியமும் எனக்குக் கிடையாது. ஆனால், உள்ளதை உள்ளபடிதானே சொல்லியாகவேண்டும்.

72 மாவட்டக் கழக செயலாளர்கள் இருந்தாலும், தம்பி உதயாவிற்குப் பிறந்த நாள் விழா என்பது முதன் முதலாக சென்னையில், இங்குதான் நடைபெறுகிறது.

மனிதநேய உதய நாள் என்று இந்த விழாவிற்குப் பெயர் வைத்திருக்கின்றார்.

2026 ஆம் ஆண்டு சட்டப்பேரவைத் தேர்தல் வரவிருக்கின்றது.

அந்தத் தேர்தலில் கழகத் தலைவர், யாரை வேட்பாளராக நிற்க வைத்தாலும், அவர் வெற்றி பெறவேண்டுமானால், உதயசூரியன் சின்னம் தேவை. உதயசூரியன் சின்னம் இல்லாமல் வெற்ற பெற முடியுமா?



### அந்த உதயசூரியனின் அடையாளம்தான் உதயா!

ஆகவே, வருகின்ற தேர்தலும், வெற்றித் தேர்தல் என்பதற்குக் கட்டியம் கூறுவதாகத்தான், இங்கே உதயநிதியின் பெயரில், ஓர் அற்புதமான முன்னெடுப்பு விழா இது! மங்களகரமான நிகழ்வு இது!!

மனிதநேய உதய நாள் என்று இவ்விழாவிற்குப் பெயர்.

நான் இந்த விழாவை எப்படிப் பார்க்கின்றேன் என்று சொன்னால், பிறந்த நாள் காணவிருக்கின்ற உதயா அவர்கள், மனிதநேயம் உள்ளவர் என்பதைக் காட்டுவதற்காகத்தான், இப்படி மாற்றிப் போட்டிருக்கிறாரோ?

அவர் மனிதநேய உதய நாள் என்று இவ்விழாவிற்குப் பெயர் வைத்திருக்கிறார்.

நான் சொல்கிறேன், உதயாவிற்கு, மனிதநேயம் இருக்கிறது என்பதை இப்படித்தான் அடையாளம் காட்டுகிறார் அவர்.

அடுத்ததாக, உதயன் என்ற தலைப்பில், ‘அன்பும் இணையும் இதயம் - ஆசைகள் வழங்கும் உதயம்’

2 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னால் பிறந்த வள்ளுவப் பெருந்தகை இப்படித்தான் சொன்னார் - திருமணப் பத்திரிகைகளில் எல்லோரும் போடுவார்கள்,

“அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது”

ஓர் இல்வாழ்க்கை சிறப்பாக இருக்க வேண்டும் என்று சொன்னால், அங்கே அன்பு குடிகொண்டிருக்கவேண்டும்.

இரண்டு பேரின் மனம் அன்பாக இருந்து இணைகின்ற மணவிழாதான் சிறப்பாக இருக்கும்.

ஆக, 25 இணையர்களுக்கு இங்கே மண விழா நடைபெறுகிறது. மணமக்களுக்கு அறிவுரையை நம்முடைய சேகர்பாபு எப்படி சொல்கிறார் என்றால்,

“அன்பும் இணையும் இதயம்” - இரண்டு பேருடைய அன்பு இதயமாக இருந்தால்தான், வாழ்க்கை மிகச் சிறப்பாக இருக்கும் என்று. 2 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு வள்ளுவர் சொன்னதை, அவரைப் போன்று தாடி வைத்துக் கொண்டிருக்கின்ற இப்போது வள்ளுவராக இருக்கக்கூடிய நம்முடைய சேகர்பாபு இப்படிச் சொல்கிறார்.

அடுத்த வரியாக அன்பும் இணையும் இதயத்திற்கு யார் ஆசி வழங்குகிறார்கள் என்றால், உதயா அவர்கள், அங்கே இருந்தே இம்மண மக்களுக்கு ஆசி வழங்குகிறார் என்பதை இப்படி மறைமுகமாகச் சொல்கிறார் சேகர்பாபு அவர்கள்.

இதை நான் முகஸ்சுதிக்காக சொல்லவில்லை. ஒரு பத்திரிகையை எடுத்துப் பார்த்தால், அதிலுள்ள வாசகங்களைப் படித்துப் பார்த்து, அதனுடைய உட்பொருளைப் புரிந்து கொள்ளவேண்டும்.

தன்னுடைய நம்பிக்கை, இந்த இயக்கத்திற்காக தன்னை ஒப்படைத்துக் கொண்ட பிறகு, யாரை எப்படி அடையாளப்படுத்த வேண்டும் என்பதில், அவருக்கு நிகர் அவர்தான் என்று சொன்னாலும்கூட அது மிகையாகாது. 27 ஆம் தேதி பிறந்த நாள் காணவிருக்கின்ற கழகத்தினுடைய கலை வேந்தனுக்கு இங்கே தொடக்க விழா நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது.

திருமண விழா என்ற பெயரில், 25 இணையர்கள் இன்றைக்கு இணைகிறார்கள் என்று சொன்னால், அவர்களையொட்டி இருக்கின்ற அவர்களுடைய உறவினப் பெருமக்கள் எவ்வளவு மகிழ்ச்சியடைவார்கள். ஆகவே, ஒரு மகிழ்ச்சியான நிகழ்ச்சி இது.

அதுமட்டுமல்ல, நம்முடைய கழக இளைஞரணி மாநில செயலாளர், என் நெஞ்சமெல்லாம் நிறைந்திருக்கின்ற என் அன்புத் தலைவர் அண்ணன் தளபதியினுடைய திருமகன் - தமிழ்நாடு அரசின் துணை முதலமைச்சராக இருந்து சிறப்பாகப் பணியாற்றிக் கொண்டிருப்பவர்.

அவர், இவரிடத்தில் சொல்லி, ‘எனக்குப் பிறந்த நாள் விழா எடு’ என்று சொல்லுகிறாரா, என்றால், இல்லை.

சேகர்பாபு என்ன எண்ணுகிறார் என்று சொன்னால், இந்தக் கழகத்திற்கு, நமக்கு ஒரு சொத்துக் கிடைத்திருக்கின்றது. அதைத் தூக்கிப் பிடிப்பதின் மூலமாக இந்த இயக்கம் வளர்ச்சி பெறும் என்று அவர் கருதுகின்றார்.

திராவிட இயக்க வளர்ச்சிக்கு இன்றைக்கு நம்முடைய இளைஞரணி செயலாளர் உதயா அவர்கள் ஓர் உந்து சக்தியாக இருக்கின்றார்.

நான், சட்டமன்றத்தில்கூட குறிப்பிட்டிருக்கின்றேன், ஒவ்வொருவரும் அவரவர் தலைமுறையைப்பற்றிப் பேசுவார்கள். பாட்டன், முப்பாட்டன் என்று. அதுபோல, எங்களுடைய திராவிட இயக்கத்திற்கும் தலைமுறைகள் உண்டு.

தந்தை பெரியார் எங்களுக்கு முதல் தலைமுறை என்று சொன்னால்,

பேரறிஞர் அண்ணா இரண்டாம் தலைமுறை என்று சொன்னால்,

முத்தமிழறிஞர் கலைஞர் மூன்றாம் தலைமுறை என்று சொன்னால்,

தமிழ்நாட்டில் இன்றைக்குத் திராவிட மாடல் ஆட்சி நடத்திக்கொண்டிருக்கின்ற அற்புதமான தாயுமானவர் தலைவராக இருக்கின்ற தளபதி, நான்காம் தலைமுறை என்று சொன்னால்,

இந்த இயக்கத்தை இன்னும் அய்ம்பதாண்டு காலத்திற்கு அழைத்துச் செல்லுகின்ற அய்ந்தாம் தலைமுறைதான் தம்பி உதயா என்று சொன்னால், அதுவும் மிகையாகாது.

அவருடைய இயக்கப் பணிகளைப் பார்த்து, என்னைப் போன்ற, சேகர்பாபு போன்ற மூத்தவர்கள், ஆனந்தப்பள்ளு பாடுகின்றோம் - கலையுலகத்தில் இருந்து வந்தவர் - இவ்வளவு இயக்கச் சிந்தனைகள் இருக்கின்றதே? இப்படி ஓடி ஓடி உழைத்துக் கொண்டிருக்கின்றாரே என்று நாங்கள் எல்லாம் ஆனந்தப் பள்ளு பாடுகின்றோம்.

நமக்கெல்லாம் தெரிந்தவர் பேராசிரியர் சுப.வீ. அவர்கள். அவருடைய தந்தை இராம சுப்பையா அவர்கள், திராவிட இயக்கத்தினுடைய மூத்த முன்னோடி.

பெரியாரோடு இரண்டற பழகியவர்; பேரறிஞர் அண்ணாவோடு இருந்தவர்; கலைஞரோடு சிறைக்குச் சென்றவர்கள்.

செட்டியார்கள் எல்லாம் அந்தக் காலத்தில் சிறைக்குப் போவார்கள் என்று எண்ணிகூட பார்க்க முடியாது. காரைக்குடி செட்டியார் அவர்.

அந்த இராமசுப்பையா அவர்களின் 118 ஆம் ஆண்டு பிறந்த நாள் விழா காரைக்குடியில் நடைபெற்றது. அவ்விழாவில் பங்கேற்று, நம்முடைய இளைஞரணி செயலாளர் தம்பி உதயா அவர்கள் உரையாற்றினார்.

தொலைக்காட்சியில் ஒளிபரப்பிய அந்த உரையை நான் பார்த்தேன். ‘முரசொலி’யில் வந்த அவருடைய உரையையும் படித்தேன். மூத்தவர்களை எப்படி மதிப்பது என்பதை, உதயாவிடமிருந்துதான் கற்றுக்கொள்ளவேண்டும் என்பதை அந்த உரையின்மூலம் தெரிந்துகொண்டேன்.

அதோடு மட்டுமல்ல, ஏதோ நானும், சேகர்பாபு அவர்களும், தமிழ்நாட்டில் இருக்கின்ற கழக மூத்த முன்னோடிகள் எல்லோரும், தம்பி உதயா அவர்களை மிகைப்படுத்திப் பேச வேண்டும் என்கின்ற அவசியம் எங்களைப் போன்றவர்களுக்கு இல்லை. உண்மையை, உண்மையாகத்தானே பேசியாகவேண்டும். தமிழ்நாட்டு முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்கள், தம்பி உதயா அவர்களுக்கு, மாநில இளைஞரணி செயலாளர் பதவியை அளித்தார்.

இன்றைய இளைஞர்கள், திராவிட இயக்கத்தைப்பற்றித் தெரிந்துகொள்ளவேண்டும், புரிந்துகொள்ளவேண்டும் என்பதற்காக, உதயா அவர்கள் அந்தப் பொறுப்பை ஏற்றதும், இளைஞர்களை அழைத்து பாசறை பட்டறையை நடத்தினார். அப்பட்டறையில், திராவிட இயக்கம் எப்படித் தோன்றியது? எப்படி வளர்ச்சி பெற்றது? வருங்காலத்தில் திராவிட இயக்கம் இளைஞரணி எப்படி அழைத்துச் செல்லும்? என்பது குறித்து அற்புதமான பயிற்சியை நடத்தினார்.

அதுமட்டுமல்ல, எழும்பூர் தொகுதி தேர்தல் பார்வையாளராக இருக்கின்ற யாழினியைப் பற்றி இங்கே சொன்னார்கள். அதுபோன்று, திராவிட இயக்கத்தில், கல்லூரியில் படித்துக் கொண்டிருக்கின்ற திராவிடச் சிந்தனை உள்ள கல்லூரி மாணவர்கள், திராவிடச் சிந்தனையுள்ள பல்வேறு சமுதாயத்தில் உள்ளவர்களையெல்லாம் அடையாளம் கண்டு, ஏறத்தாழ எனக்குத் தெரிந்து, 200-க்கும் மேற்பட்ட, வருங்காலத்தில் இந்த இயக்கத்தைத் தூக்கிப் பிடிப்பதற்காக சொற்பொழிவாளர்களைத் தேர்வு செய்த அந்த முறையைப் பார்த்து நான் அசந்து போனேன்.

வரலாறுகள் மறைந்துவிடக் கூடாது; பிற்காலத்தில் வருகின்றவர்களுக்குத் தெரியவேண்டும் என்பதற்காக அவற்றையெல்லாம் புத்தகங்களை வடித்தெடுக்கவேண்டும் என்பதற்காக ஒரு பதிப்பகத்தைத் தொடங்கி, பல்வேறு புத்தகங்கள் வெளியிட்டு இருக்கிறார். அதைப் பார்க்கின்றபோது எங்களைப் போன்ற இலக்கியவாதிகள் மகிழ்கிறோம்.

சில நாள்களுக்கு முன்பு, வள்ளுவர் கோட்டத்தில் ‘அறிவுத்திருவிழா’ என்ற அற்புதமான தலைப்பில் விழா நடைபெற்றது. அவ்விழாவில் ஒரு புத்தகத்தைப் பார்த்தேன், “கருப்பு சிவப்பு” என்ற புத்தகம்தான் அது.

### நமக்கெல்லாம் கருப்பு – சிவப்புதான் பிடிக்கும்.

கருப்பு - சிவப்பு புத்தகத்தைப் படித்தோம் என்றால், இந்த இயக்கத்தினுடைய வரலாற்றையெல்லாம் தெரிந்துகொள்ளலாம்.

சேகர்பாபு அவர்கள், பிறந்த நாள் விழா என்ற பெயரில், யாருக்காக இந்த விழாவை நடத்திக் கொண்டிருக்கிறாரோ, அவர் அனைத்துத் திறமைகளும் உள்ள, நம்முடைய இயக்கத்திற்குக் கிடைத்திருக்கின்ற கருவூலம்தான் நம்முடைய உதயநிதி ஸ்டாலின் அவர்கள்.

எனவே, அவருடைய பிறந்த நாள் விழாவில் இங்கே இணையேற்பு விழாவை நடத்திக் கொண்ட 25 இணையர்கள் மகிழ்ச்சியாக இருக்கின்றார்கள்.

வந்திருக்கின்ற 25 இணையர்கள் சார்பாகவும், இவ்விழாவிற்குத் தலைமைப் பொறுப்பேற்று இருக்கின்ற நம்முடைய வானவில் விஜய் உள்பட, இளைஞரணியின் சார்பாகவும், அவருக்கு மூத்தவர்களாக இருக்கின்ற சேகர்பாபு, எ.வ.வேலு போன்ற இங்கே வந்திருக்கின்ற கழக, தாய்க்கழகத்தின் சார்பாகவும், உதயா அவர்கள், இன்னும் நூறாண்டு காலம் தமிழ்நாட்டில் வாழ்ந்து, இன்னும் சேகர்பாபு மொழியில் சொல்லவேண்டுமானால், ஆன்மிகமாகச் சொல்லவேண்டுமானால், “பல்லாண்டு பல்லாண்டு பல கோடி நூறாண்டு வாழவேண்டும்” என்று வாழ்த்தி,

மணமக்களாகிய நீங்கள், வாழ்க்கையில் ஒருவரை ஒருவர் புரிந்துகொண்டு வாழக் கற்றுக்கொள்ளுங்கள். ஒருவரை ஒருவர் புரிந்துகொண்டு வாழுகின்ற வாழ்க்கைத்தான் சிறப்பான வாழ்க்கையாக இருக்கும்.

எனவே, மணமக்களாகிய நீங்கள் ஒருவரை ஒருவர் புரிந்துகொண்டு வாழக் கற்றுக் கொள்ளுங்கள்.

அதற்கு அடுத்தபடியாக சொல்கிறேன், போட்டிப் போட்டுக்கொண்டு வாழாமல், ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுத்து வாழுங்கள். விட்டுக் கொடுக்கின்ற சமுதாயம்தான் சிறப்பான சமுதாயமாக இருக்கின்றது.

நான், என்னுடைய இணையர் என்ன சொல்கிறாரோ, அதன்படிதான் நடப்பேன், என் குடும்ப விஷயத்தைப் பொறுத்தளவிற்கு. அது போன்ற வாழ்க்கைதான் சிறப்பான வாழ்க்கையாக இருக்கும் என்று சொல்லி,

நீடு புகழோடு, நிலைத்த செல்வத்தோடு மணமக்கள் பெருவாழ்வு வாழவேண்டும்.

இவ்வாறு அவர் பேசினார்.

### பா.ஜ.க. நிர்வாகி ராதா தலைமையில் – சின்னாளபட்டி மேட்டுப்பட்டியை சேர்ந்த

# பா.ஜ.க. - அ.தி.மு.க.வினர் கழகத்தில் இணைந்தனர்!

## அமைச்சர் இ.பெரியசாமி முன்னிலையில்!

*திண்டுக்கல், நவ. 17 -*

மாற்றுக் கட்சிகளிலிருந்து கழகத்தில் இணைந்தவர்களை கழகம் கைவிடாது என்று ஊரக வளர்ச்சி துறை அமைச்சர் ஐ பெரியசாமி அவர்கள் பேசியதோடு கழகத்தில் இணைந்த மேட்டுப்பட்டி பகுதி சேர்ந்த 50 பாஜகவினர் மற்றும் கலிக்கம்பட்டி நெசவாளர் காலனி சேர்ந்த 10 அதிமுகவினற்கு கட்சியின் சின்னம் பொறித்த ஆடை அணிவித்து வாழ்த்து தெரிவித்தார்திண்டுக்கல் மாவட்டம் ஆத்தூர் ஒன்றியத்துக்கு உட்பட்ட சின்னாளபட்டி மேட்டுப்பட்டியை சேர்ந்த பாஜக ஐடி விங் செயலாளர் கோபாலகிருஷ்ணன் பொருளாளர் சூர்யா, ஐ .டி .விங்ஆன்மீக மண்டல செயலாளர் பாரதி ராஜா, கிளைத்தலை வர்கள் ராஜன், புனிதா, நிர்மலா, சரவணன் உட்பட 50 பாஜகவினர் மற்றும் கலிக்கம்பட்டி நெசவாளர் காலனி சேர்ந்த அதிமுகவினர் 10 பேர் உட்பட 60 பேர் அக் கட்சிகளில் இருந்து விலகிபாஜக முன்னாள் மண்டல செயலாளரும் செயற்குழு உறுப்பினருமான ஜி ராதா தலைமையில் அமைச்சர் ஐ. பெரியசாமி அவர்கள் முன்னிலை யில் தங்களை திமுகவில் இணைத்து கொண்டனர் திமுகவில் இணைந்தவர்களுக்கு கட்சியின் சின்னம் பொறித்த ஆடை அணிவித்து வாழ்த்து தெரிவித்த அமைச்சர் பெரியசாமி அவர்கள்நான் முதன்முத லாக 1989 ஆம் வருடம் ஆத்தூர் தொகுதியில் போட்டியிட்டபோது எனக்கு ஆதரவு அளித்த கிராமங்களில் சின்னாளபட்டியும் ஒன்று இன்று வரை அவர்கள் கொடுத்து வரும் ஆதரவை என்னால் மறக்க முடியாது கடந்த 30 ஆண்டுகளாக மாற்றுக் கட்சியை சேர்ந்தவர்கள் பலர் திமுகவில் இணைந்துள்ளனர். அவர்கள் திமுகவில் உயர் பதவியில் உள்ளனர் மேலும் அவர்கள் உள்ளாட்சி பதவியிலும் உள்ளனர்.

அதுபோல இன்று தங்களை தாய்க்கழகமான திமுகவில் இணைத்து கொண்ட அனைவரையும் ஒருபோதும் திமுக கைவிடாது அவர்களுக்கு நான் என்றும் உறுதுணையாக இருப்பேன் மேலும் திமுக நிர்வாகிகள் தொண்டர்கள் அவர்களை அரவணைத்து கட்சி பணியாற்ற வேண்டும் என வேண்டுகோள் விடுத்தார் திமுகவில் இணைந்து கொண்டவர்கள் தங்களுடைய மாற்றுக் கட்சியை சேர்ந்த அடையாள அட்டையை அமைச்சர் பெரியசாமியிடம் வழங்கி வாழ்த்து பெற்றனர் நிகழ்ச்சியின் போது தலைமை செயற்குழு உறுப்பினர் ஆத்தூர் நடராஜன் கிழக்கு மாவட்ட பொருளாளர் சத்யமூர்த்தி ஆத்தூர் தொகுதி தேர்தல் பொறுப்பாளர் கள்ளிப்பட்டி மணி ஆத்தூர் கிழக்கு ஒன்றிய செயலாளர் பிள்ளையார் நத்தம் முருகேசன், நிர்வாகி அம்பை ரவி, பேரூர் கழக பொறுப்பாளர் பாலகிருஷ்ணன், பேரூராட்சி மன்ற தலைவர் பிரதீபா கனகராஜ், , அகரம் பேரூராட்சி மன்ற தலைவர் நந்தகோபால், திண்டுக்கல் கிழக்கு பகுதி செயலாளர் ராஜேந்திரகுமார், முன்னாள் ஒன்றிய குழு உறுப்பினர்கள் காளீஸ்வரி மலைச்சாமி, சுமதி கணேசன் மாவட்ட தொண்டர் அணி துணை அமைப்பாளர் கும்மம்பட்டி விவேகானந்தன், பஞ்சம்பட்டி மணி உட்பட தி.மு.க. நிர்வாகிகள் பலர் உடன் இருந்தனர்.



குன்றத்தூர் தெற்கு ஒன்றியம் மணிமங்கலம் ஊராட்சியைச் சேர்ந்த இரா.டார்ஜன் குமார் தலைமையில் 150 மாற்றுக்கட்சியினரும், ஆதனூர் ஊராட்சி த.வெ.க கட்சியைச் சேர்ந்த கே. நரேஷ், ஜே.புருஷோத்தமன், ராஜ்மோகன் ஆகியோர் தலைமையில் 40 பேரும் மாவட்டச் செயலாளரும், அமைச்சருமான தா.மோ.அன்பரசன் முன்னிலையில் அக்கட்சிகளிலிருந்து விலகி திமுகவில் இணைந்தனர். உடன் ஒன்றிய கழகச் செயலாளர் படப்பை ஆ.மனோகரன், ஒன்றியக் குழு தலைவர் சரஸ்வதி மனோகரன் மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.